[1974 சனவரி 23

கோவை மாவட்டத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு

*71. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள நகராட்சிப் பகுதிகளிலுள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவுக்கென ரொட்டி வழங்கப்படுகின்றதா?

(இ) ஆம் எனில், இது மதிய உணவுக்குப் பதிலாக வழங்கப்பட்டதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

சிறுவாடா அரிசனக் காலனியில் சமுதாயக்கூடம்

*72 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் 12—3—1973 அன்று வினா எண் 332-ன் மீதான துணை வினாவுக்கு அளித்த விடையையொட்டி தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், சிறுவாடா அரிசனக் காலனியில் சமுதாயக்கூடம் அமைக்கும் திட்டத்தின் மீதான மறு பரிசீலனை முடிந்து விட்டதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: சிறுவாடா அரிசனக் காலனியில் சமுதாயக்கூடம் 1973-74-ம் ஆண்டில் கட்ட, அண்மையில், அதாவது 28—9—1973-ல் அரசு அனுமதியும், அதற்குத் தேவையான செலவு தொகையும் வழங்கியுள்ளது. கூடிய சீக்கிரம் கட்டி முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கா. வேழவேந்தன்: சென்ற ஆண்டுக்கு முன்னாலேயே இந்தத் திட்டம் துவங்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து: கட்டடம் கட்ட துவங்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். சீக்கிரம் கட்டடம் கட்டி முடிக்கப்படும்.